**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : STC Case No.309/2022**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : திருமதி.சாவித்திரி |
| Father's/Husband Name | : திரு.பாலகிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 24th day of January 2024.**

(எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளாரகள்)

முதல் விசாரணை,

1. நான் தற்போது சூணாம்பேட்டில் குடியிருந்து வருகிறேன். சாட்சி பாலகிருஷ்ணன் எனது கணவர் ஆவார். சாட்சி மோகன்ராஜ் எனது மகன் ஆவார்.

2. கடந்த 29.4.2022ம் தேதி சூணாம்பேட்டில் உள்ள எங்கள் இடத்தில் கடை கட்டிக்கொண்டு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகளான உத்தமன், சங்கீதா, ஷீலாதேவி, சதிஷ் மற்றும் எதிரி தயாளன் மற்றும் கிருஷ்ணவேணி, தேசிங் ஆகியோர்கள் நாங்கள் வேலை செய்த இடத்தில் வந்து சண்டை போட்டு அடித்து எங்களை வேலை செய்ய விடாமல் துரத்திவிட்டார்கள்.

3. மறுநாள் இந்த மேற்சொன்ன சம்பவம் குறித்து சூணாம்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த புகாரின் பேரில் எங்களிடம் சி.எஸ்.ஆர்.காப்பி கொடுத்தார்கள். மறுநாள் 1.00மணியளவில் நான் எங்களது கடைக்கு மருந்து எடுப்பதற்காக சென்றபோது உத்தமன், சதிஷ் , சங்கீதா, தயாளன், ஷீலாதேவி ஆகியோர்கள் எங்கள் இடத்தில் கம்பி வேலி போட்டுக்கொண்டுஇருந்தார்கள். அதனால் அதனை குறித்து கேட்க சென்ற என்னையும், எனது கணவர் பாலகிருஷ்ணன் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்களை கையாலும், கட்டையாலும்

எங்கள் மூவரையும் அடித்து நீங்கள் செத்தால் தான் இந்த இடம் எங்களுக்கு கிடைக்கும் என்று மிரட்டினார்கள். உத்தமனும், சதிஷ் மற்றும் தயாளன் ஆகியோர்கள் எனது கணவர் பாலகிருஷ்ணனை வயிற்றிலும், கழுத்திலும் அடித்துவிட்டார்கள். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி தயாளன் எங்களை பார்த்து தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி நீங்கள் செத்தால் தான் இந்த இடம் எங்களுக்கு கிடைக்கும் என்று சொன்னார்கள்.

நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது எதிரிகள் எங்களுக்கு சொந்தமான பூச்சி மருந்து கடையை உடைத்து சேதப்படுத்தினார்கள். கடையில் இருந்த 50,000/- மதிக்கத்தக்க மருந்துகளை சேதப்படுத்தினார்கள். மேலும்மீட்டர் பாக்சை உடைத்துவிட்டார்கள். கடையில் வைத்திருந்த தஸ்தாவேஜிகளை கிழித்துபோட்டுவிட்டார்கள். காயம்பட்ட எனது கணவர் பாலகிருஷ்ணன் மற்றும் எனது மகன் மோகன்ராஜ்ஜை சிகிச்சைக்காக ஆம்புலன்சில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

இது குறித்து நான் சூணாம்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் தான் எழுதினேன். புகார் முழுவதையும் நான் தான் எழுதினேன். என்னை யார் யார் அடித்தார்கள் என்றால் என்னை யாரும் அடிக்கவில்லை. என்னை வெளியே தள்ளிவிட்டார்கள். உத்தமன் மற்றும் சதிஷ்ஜீம் என்னை இழுத்துவிட்டபோது நான் எங்கே இருந்தேன் என்றால் ஆரவல்லி நகரில் உள்ள எங்கள் மருந்து கடையில் பின்பக்கத்தில் இருந்தேன். கம்பிவேலிக்குள்ளே இருந்தேன்.

வேலி போட்ட நபர்கள் சுமார் 5லிருந்து 6 நபர்கள் இருப்பார்கள். வேலிபோட்டவர்கள் எங்கள் வாசலில் தான் பள்ளம் தோண்டி வேலி போட்டார்கள். வேலிபோடும்போது தயாளன் மறித்துவிட வந்தார். உத்தமன் மற்றும் சதிஷ் அடித்தார்கள். என் மகனையும், எனது கணவரையும் யார் யார் எதால் அடித்தார்கள் என்றால் சதிஷ் மற்றும் உத்தமனும் காலால்

கழுத்தையும், வயிற்றையும் மிதி மிதி என்று மிதித்து நீ செத்தால் தான் அந்த இடத்திற்கு விடுவு காலம் வரும் என்று சொன்னார்கள். தயாளன் அங்கு நின்று கொண்டு இருந்தார்.

போலிசார் என்னை விசாரிக்கும்போது நீசெத்தால் தான் இந்த இடத்திற்கு விடுவு காலம் வரும் என்று எதிரிகள் சொன்ன விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன விவரத்தை உத்தமன் தான் சொன்னார். உத்தமன், சதிஷ் ஆகியோரை தவிர மற்றவர்கள் யாரும் என்னையோ, எனது கணவரையோ, எனது மகனையோ தாக்கவில்லை என்றால் சரிதான்.

முதல் நாள் சண்டையில் யார் யார் யாரை அடித்தார்கள் என்றால் உத்தமன், சதிஷ், ஷீலாதேவி, சங்கீதா, தயாளன் ஆகியோர் எனது கணவரை தடியால் தாக்கினார்கள். கீழே கிடந்த இரண்டு தடிகளை எடுத்து உத்தமன், மற்றும் சதிஷ் எனது கணவரை தாக்கினார்கள். உத்தமன் எனது கணவரின் இரண்டு கால்களிலும் தடியால் அடித்தார். அதில் எனது கணவருக்கு வீக்கம் ஏற்பட்டதா என்றால் வீக்கம் ஏற்பட்டது.

சதிஷ் எனது கணவரின் கழுத்தில் காலை வைத்து அழுத்தி கொண்டு வயிற்றிலும், தலையிலும் தடியால் அடித்தார். தலையில் அடித்ததில் வீக்க காயம் மட்டும் ஏற்பட்டது. மண்டை எதுவும் உடையவில்லை. தலையில் எந்த பக்கத்தில் வீக்க காயம் ஏற்பட்டது என்று எனக்கு சரியாக நினைவில்லை.

30.4.2022 அன்று தான் முதல் சண்டை ஏற்பட்டது. கடையில் புகுந்து என்ன என்ன பொருட்களை சேதப்படுத்தினார்கள் என்றால் 50,000/- ரூபாய் மதிப்புள்ள யூரியா மூட்டை, பொட்டாசியம், டி.ஏ.பி., குரனை மருந்துகள் ஒவ்வொன்றிலும் சுமார் 10 மூட்டைகளை பிரித்து சேதப்படுத்தினார்கள்.

மேற்சொன்ன பொருட்களை யார் யார் சேதப்படுத்தினார்கள் என்றால் ஆஜர் எதிரகள் சொல்லி கம்பி வேலி போட வந்த நபர்கள் சேதப்படுத்தினார்கள். ஆஜர் எதிரிகள் நேரிடையாக மேற்சொன்ன பொருட்களை சேதப்படுத்தவில்லை என்றால் சரிதான். அவர்கள் சொல்லி தான் கம்பி வேலி போட வந்தவர்கள் சேதப்படுத்தினார்கள்.

50,000/- ரூபாய் மதிப்புள்ள யூரியா மூட்டை, பொட்டாசியம், டி.ஏ.பி., குரனை மருந்துகளை சேதப்படுத்திய விவரத்தை எனது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும்

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளுக்கு சொந்தமான இடத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டதால் அந்த சொத்தில் இருந்து எதிரிகளை வெளியேற்றுவதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் ஒன்றை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

அந்த இடம் உத்தமன் மாமியார் ஜீலாதேவி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் தான் உள்ளது. அந்த சொத்து சம்பந்தமாக செங்கல்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். நில அபகரிப்பு பிரிவு மாவட்ட எஸ்.பி. ஆபிசில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். அங்க சொத்து சம்பந்தமான அசல் ஆவணங்களை நானும், எனது கணவரும் காட்டினோம் என்றால் சரிதான்.

சண்டை நடந்தபோது எந்த எந்த ஆவணங்களை யார் யார் திருடி சென்று கொண்டார்கள் என்றால் சண்டை நடந்தவுடன் போலிசார் அந்த இடத்திற்கு வந்து எங்கள் கடையை பூட்டி சாவி எடுத்து சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் ஒருவாரம் கழித்து போலிசார் மீண்டும் கடையை திறந்த பிறகு தான் ஆரவல்லி நகரில் மீன் கடை அருகே உள்ள எங்களது இடத்தின் அசல் ஆவணங்களை திருடி சென்றுவிட்டதை தெரிந்துகொண்டோம்.

ஒருவார காலமாக கடையை பூட்டி அதன் சாவியை போலிசார் தான் வைத்திருந்தார்கள் என்றாலும் போலிசாரிடமிருந்து தான் சாவியை வாங்கி வந்து நாங்கள் கடையை திறந்தோம் என்றால் சரிதான். இரண்டாவது நாள் சம்பவத்தில் எந்த எந்த ஆவணங்களை யார் யார் கிழித்தார்கள் என்றால் என்ன என்ன ஆவணங்கள் என்று எனக்கு சரியாக தெரியாது. எனது கணவர் சொல்லி தான் பத்திரத்தை இல்லை என்று தெரிந்து கொண்டேன்.

எதிரிகள் என் முன்பாக எந்த ஆவணத்தையும் கிழிக்கவும் இல்லை எடுத்து சென்று ஓடவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவசரத்தில் நான் சரியாக கவனிக்கவில்லை. எனது மகனையும், எனது கணவரையும் மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள்.

எனது மகன் மோகன்ராஜ்ஜை யார் யார் எதால் அடித்தார்கள் என்றால் உத்தமன் மற்றும் சதிஷ் ஆகியோர் எனது கணவரை அடிப்பதை மடக்க சென்ற எனது மகனையும் அடித்துவிட்டார்கள். எனது மகனுக்கு இரண்டு கால்களிலும் லேசான காயம் தான் ஏற்பட்டது.

தள்ளிவிட்டதால் எனது மகனுக்கு வலது கையில் சிராய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டது. எனது மகனும் மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்.

மேற்சொன்ன விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் ஷீலாதேவிக்கு சொந்தமான இடத்தை போலி ஆவணங்களை தயார் செய்து அந்த இடத்தை அபகரிக்கும் என்ற நோக்கத்தில் நாங்களோ, எனது ஆட்களும் சேர்ந்து எதிரிகளை தாக்கிவிட்டோம் என்றால் சரியல்ல.

இந்த சண்டை சம்பந்தமாக எதிரிகள் மீதும், எனது கணவர் மீது சூணாம்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதனடிப்படையில் என்னையும், எனது கணவரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் நாங்கள் பிணை பெற்றோம் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தமாக முதல்நாள் சண்டைக்கு எனது கணவர் ஒரு புகாரையும், மறுநாள் சண்டைக்கு நான் புகார் கொடுத்தேன். முதல் நாள் சண்டைக்கு காவல் நிலையத்தில் எங்களை போலிசார் விசாரித்தார்கள். மறுநாள் சண்டைக்கு சம்பவம் நடந்ததிலிருந்து போலிசார் எங்களை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்கு யார் யாரை வரவழைத்து விசாரித்தார்கள் என்றால் என்னையும், எனது கணவரையும் அழைத்து விசாரித்தார்கள்.

தவறான காரணங்களுக்காக நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் பொய்யான புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை..இல்லை.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur